1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இவ் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அணைக்கட்டு வேலை முடியும் தருவாயில் உள்ளது. வாய்க்கால் வேலை, குறுக்குக் கட்டிடம் கட்டுதல் முதலிய வேலைகள் துவங்கவிருக்கின்றன.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, அணைக்கட்டு வேலை முடிவடையும் தருவாயில் இருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். வாய்க்கால் வேலை எப்போது முடிவு அடையும்? அந்த வாய்க்கால் வேலை முடிவானால் எவ்வளவு ஏக்கர் புதிதாகப் பாசனம் பெறும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வாய்க்கால் வேலை, குறுக்கே கட்டடம் கட்டும் வேலை நடைபெறுகிறது என்று சொன்னேன். இந்த அணைக்கட்டு மூலம் பலன் அடையும் பூமியின் அளவு 222.50 ஏக்கர்.

குமரி மாவட்டத்தில் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு

*268 **வினா—திரு. வீ. கார்த்திசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மழை காலங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருக்கெடுத்து வீணாகப் போய் கடலில் விழும் தண்ணீரைத் தேக்கி, அண்டையிலுள்ள இராதாபுரம் சானலில் விடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், ராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் வேண்டுமென்று அங்கேயுள்ள பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி தண்ணீர் இல்லாத பகுதி. கன்னியாகுமரி மாவட்டத்தில் பழைய ஆற்றில் மழைக் காலத்திலும், மற்ற நாட்களிலும் தண்ணீர் பாழாகிக் கொண்டு போகிறது. ஆகவே அந்தப் பழைய ஆற்றின் குறுக்கே அணை கட்டி, லிப்ட் இர்ரிகேஷன் மூலமாகவாவது இந்த ராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் விடும் திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அங்கத்தினர் புது திட்டத்தை தெரிவிக்கிறார்கள்.

Lands acquired for fly over near Gemini

*269 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether land was acquired from private parties for the construction of the fly over near the Gemini Studio at Madras;

(*b*) if so, the details thereof; and

(*c*) the amount of compensation paid therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(ஆ) ஆர்ஜிதம் செய்யும் நிலங்களின் விவரம்.

புலன் எண்.	தாலுகா	விஸ்தீரணம்	
		காணி. கிர.	ச. அடி.
(1)	(2)	(3)	(4)
1 ஆர். எஸ். நெ. 3/10 பகுதி புதிய எண். 3/13 மைலாப்பூர்.	சென்னை (தென் கிழக்கு) வட்டம்.	0·03	1,312
2 ஆர். எஸ். நெ. 48/6 பகுதி புதிய எண். ஆர். எஸ். நெ. 48/18 நுங்கம்பாக்கம்.	சென்னை (மத்திய) வட்டம்.	0·02	2,076
3 ஆர். எஸ். நெ. 48/10 பகுதி புதிய எண். ஆர். எஸ். நெ. 48/17 நுங்கம்பாக்கம்.	சென்னை (மத்திய) வட்டம்.	0·00	0,189
4 ஆர். எஸ். 48/11 பகுதி புதிய எண். ஆர். எஸ். 48/16 நுங்கம்பாக்கம்.	சென்னை (மத்திய) வட்டம்.	0·00	1,834
	மொத்த விஸ்தீரணம் ..	0 07	0·611

(இ) நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும் சார்புடைய நபர்களுக்கும் ஈட்டுத் தொகை கொடுப்பது பற்றிய விவரங்கள் இறுதியாக்கப்படவில்லை. இறுதி நிலையில் உள்ளன. எனவே, நஷ்ட ஈட்டுத்தொகை இதுகாறும் ஒருவருக்கும் கொடுக்கப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS